UNIVERSITY OF JAFFNA
LIBRARY
05 MAR 2001
PERIODICALS DIVISION




# சங்கமம்
# SANGAMAM

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

கூட்டுறவுக் குரல் Voice of Co-op

ஆறு 4 திருவள்ளுவர் ஆண்டு 2031 டிசம்பர் / மார்கழி 2000 அருவி 4


# போரையும் பொருண்மியச் சுமையையும் தாங்கி நிற்பது கூட்டுறவு நிறுவனங்களே!

## தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் வீ. பூவண்ணன்

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்த எதிரி எத்தனை முயற்சிகளை மேற்கொண்டபோதும் அத்தனை முயற்சிகளையும் முறியடித்து மக்களின் பொருண்மிய வாழ்வுக்கு பக்கத்துணையாக நின்று செயற்படுவது கூட்டுறவு இயக்கமாகும். அதே வேளை கூட்டுறவும் கூட்டுறவாளர்களும் சந்திக்கின்ற பிரச்சினைகள் யாவும் தற்காலிகமானதே வடிவு பெறும் இன்றைய கால கட்டத்தில் உங்களது சேவைகளும், தேவைகளும் நன்கு மதிக்கப்படும் இன்றைய மாநாட்டின் மூலம் உங்கள் ஒவ்வொரு வரையும் சந்தித்து உங்கள் பிரச்சினைகளை கேட்டறிந்தேன் இவற்றை உரிய கவனத்தில் எடுத்து கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு என்றும் பக்க பலமாக இருப்பேன்.

அதே போன்று கூட்டுறவாளர்களும் மக்களின் வாழ்வியலுக்கு ஏற்றபடி உங்கள் சேவைகளை விரிவுபடுத்தி பகிர்ந்தளிப்பதன் மூலமாக முழு நிறைவைப் பெற முடியும் என மாநாட்டில் பங்குபற்றி உரை நிகழ்த்துகையில் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு வீ. பூவண்ணன் அவர்கள் தெரிவித்தார்



அறுசுவை உணவை
-உண்டு
வீட்டிலே அடிமையாக
-வாழும்
நாயைப் பார்க்கிலும்
அறுசுவை உணவின்றி
காட்டிலே சுதந்திரமாக
-வாழும்
ஓநாயின் வாழ்க்கை
-சிறந்தது

## கூ. சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வு

அமைதி முயற்சிகளை கைவிட்டு போரை தீவிரப்படுத்தும் சிறிலங்கா அரசின் போக்கினால் வடக்கு கிழக்கு பகுதிவாழ் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வு நிலை மிக மோசமாக பாதிக்கப்பட்டு வருகிறது.

இராணுவ ஆக்கிரமிப்பு பொருளாதாரத் தடை, இராணுவ தாக்குதலால் ஏற்பட்ட அழிவுகளுக்கு இழப்பீடு வழங்காமை போன்றவற்றால் கூட்டுறவுச் சங்கங்கள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய சேவைகளை வழங்க முடியாமல் அவதிப்படுகின்றன. இது குறித்து ஆராய்வதற்கான மாநாடு கடந்த 14ந் திகதி நடைபெற்றது.

கிளிநொச்சி முல்லைத்தீவு மன்னார் மாவட்டங்களில் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. நா. முருகேசு முல்லைத்தீவு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு நா. கந்தசாமி அவர்கள், மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செல்வி சுவாமிபிள்ளை அவர்கள் கிளி, முல்லை மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள்

(6ம் பக்கம் பார்க்க)

## ஒட்டமிட்ட மனிதப் படுகொலையின் புதைகுழியை கண்டித்து மகஜர்

சிங்கள அரசின் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியான யாழ் தென்மராட்சி மிருசுவில் பகுதியில் பொதுமக்கள் எட்டுப்பேர் சிறிலங்கா இராணுவத்தால் மிலேச்சத்தனமாக படுகொலை செய்யப்பட்டு புதைகுழியில் புதைக்கப்பட்ட சம்பவத்

(6-ம் பக்கம் பார்க்க)

## சூறைக் காற்றினால் 96 இலட்சம் நட்டம்

அண்மையில் ஏற்பட்ட கடும் சூறைக்காற்றினால் முழங்காவில் பகுதி விவசாயிகள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என தெரிய வருகிறது. கூடுதலாக வாழைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் முற்று முழுதாக பாதிக்கப்பட்டுள்ள

(6-ம் பக்கம் பார்க்க)

## பாரஊர்தி உரிமையாளர் கூ. சங்கத்தின் பணி அளவிட முடியாத பெறுமதியானது

### கிளி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

வடபிராந்திய பார ஊர்திகள் உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் இக்கட்டான சூழ்நிலையிலும் வன்னி மக்களுக்கு அளப்பரிய சேவையை வழங்கியுள்ளது விலைமதிக்க முடியாத பெறுமதி மிக்கதாகும் சேவையின் அளவை மதிப்பீடு செய்வது கடினம்.

ஒழுங்கு முறையான சேவையின் நீண்டகாலத்துக்கு நின்று நிலைத்து விரிவடைவக் கூடியது என்பதை இவர்களது செயற்பாடுகளை உற்றுநோக்கும் போது என்னால் அவதானிக்க முடிகிறது என பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போது கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் நா. முருகேசு தெரிவித்தார்

மேற்படி சங்கத்தின் தலைவர் திரு சு பாஸ்கரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ் வருடாந்தப் பொதுக் கூட்டத்தினை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் திரு. சு. சிறில் அவர்களும், வடபிராந்திய பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் நேரடிக் கண்காணிப்பாளர் திரு புவிராசா அவர்களும், மங்கள விளக்கேற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை தமி

(6-ம் பக்கம் பார்க்க)

## இருளில் நடந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்

ஊர்காவற்றுறைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிறிஸ்தவப் பணியாளர்கள் ஒன்றிணைந்து கிறிஸ்துவின் பிறப்பு விழாவை ஒளிவிழாவாக நினைவு கூரப்பெற்றது இந் நிகழ்வு கிளி/ஊர்காவற்றுறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்தில் அதன் தலைவர் தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவின் மங்கள விளக்கினை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. நா. முருகேசு அவர்களும் ஒன்றியத் தலைவர் திரு சு. சிறில் அவர்களும் ஏற்றிவைக்க இறித்து

(6-ம் பக்கம் பார்க்க)



"இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்; மரண நிழல் படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்துச் சுடர்விற்று" (இசையாஸ் 9;2)

அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும் எமது உளம் கனிந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்-சங்கமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA LIBRARY 05 MAR 2001

# மீண்டும் எழுச்சிப் பாதையில் வீறுநடை போடும் உருத்திரபுரம்

1950ம் ஆண்டு உருத்திரபுரம் கிராமம் பரந்தன் புதியகொலனிஎன்ற பெயருடன் குடியேற்றம் செய்யப்பட்டது. புதிய கொலனி எனப் பெயர் வைத்தமைக்கு ஓர் காரணமும் இருந்தது இன்று கணேசபுரம் என அழைக்கப்படும் கிராமம் பழைய கொலனி என அழைக்கப்பட்டது 1939ம் ஆண்டு இக் கிராமம் கொடுக்கப்பட்டது. இராணுவ நடவடிக்கை காரணமாக இன்று இக்கிராமம் சோபை இழந்து காணப்படுகின்றது இக்கால நிகழ்விலே 1996ம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கையுடன் கிளிநொச்சியின் மேற்குப்பகுதியில் அமைந்திருந்த பல கிராமம் இடப்பெயர்வுக்குள்ளாகின இதில் உருத்திரபுரம் கிராமமும் ஒன்றாகும்

1999ம் ஆண்டு ஓயாத அலைகள் 2, 3 நடவடிக்கையின் மூலம் கிளிநொச்சிப் பகுதியும் பெரும இராணுவத்தளமாகிய ஆனையிறவும் வீழ்ச்சி கண்டதன் விளைவாக தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்படி கிராமத்தை மீளவும் குடியமர்த்த முயன்றதன் விளைவாக 2000ம் ஆண்டு தை மாதம் முதல் தங்கள் சொந்த இடத்தில் குடியேறிவருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக சிவநகர்ப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களும் சிவநகரில் இடம்பெயராது இருந்தவர்களும் உருத்திரபுரம் சிவன் கோயிலை புனரமைப்புச் செய்து சிவன் அருள் கிடைக்க தங்கள் கடமைகளை செவ்வனே செய்து வருகின்றார்கள் உருத்திரபுரத்தின் தென் பகுதியில் புதுமுறிப்பு குளக்கரையில் அமைந்து இருக்கும் கற்பக விநாயகர் ஆலயம் புனருத்தாரண வேலைகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. அதேநேரம் உருத்திரபுரம் வடக்கில் அமைந்துள்ள முருகன் ஆலயமும் மாணிக்கப்பிள்ளையார் ஆலயமும் தங்கள் அருள் பாலிக்க முடியாத நிலை அமர்ந்து இருக்கின்றார் பாலையடிப்பிள்ளையார் கோயில் பொறிக்கடவை அம்மன் கோயில் என்பவற்றில் நித்திய பூசை நிறைவேறி வருகின்றது. புனிதபத்திரிமா ஆலயம் தனது திருவருளை தினமும் இக்கிராமத்திற்கு அருள வில்லை ஆரோபனம் ஆண்கள் விடுதி இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் உருத்திரபுரம் கிராமத்தில் மீள் குடியேற்றத்தை துரித கெதியில் போறாட் நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முன்னெடுத்து உருத்திரபுரம் மேற்குசிவநகர்போன்ற கிராமங்களில் வீடுகள் கட்டியும் கோழிவளர்ப்பு சிறுதானியம் நெல் வேளாண்மை என்பவற்றிற்கு மானியமும் வழங்கி கிராமியப் பொருளாதாரத்தை ஊக்கிவிக்கின்றது இதற்காகவே கிராமிய பொருளாதாரக் குழுக்களை அமைத்து செயற்படுத்தி வருகின்றார் இப்பகுதியின் தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் இணைப்பாளர் புலேந்திரன் தனது முழுத் திறமையும் காட்டி செயற்படுத்தி வருகின்றார் இவரின் உதவியாளர்களின் பங்கும் அளப்பரியது.

சிரமதானப் பணியில் முக்கிய இடங்களை மக்கள் உதவியுடன் திருத்தியும் வருகின்றார்கள் பொது மயானம், வீதிகள் வைத்தியசாலை என்பன திருத்தப்பட்டு வருகின்றன உருத்திரபுரம் மருந்தகமும், பிரசவ விடுதியும் காடுமண்டி இருந்த நிலையில் இருந்தது இது 10-12-2000 ஆண்டு சகல கிராமமக்களாலும் சிரமதானம் மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது அதே போன்று புரட்டாதி மாதத்தில் பொது மயானமும் துப்பரவு செய்யப்பட்டுள்ளது. உருத்திரபுரம் மேற்கு மக்கள் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தையும் புதுமுறிப்பையும் இணைத்து அரைக்கிலோமீற்றர் பழுதான பாதையை சிரமதானம் மூலம் திருத்தியுள்ளனர் இதே போன்று சிவநகர் பாடசாலை அருகாமையில் கிழக்கு வீதியும் சிரமதானம் மூலம் செப்பனிடப்படுகின்றது அத்தோடு இப்பகுதியில் இருந்த இருவிளையாட்டுக் கழகத்தில் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் தனது செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது.

கிராமத்தின் எழுச்சியாகவும் மக்களின் அறிவுப்பசிக்கு விருந்தளிக்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகிய உருத்திரபுரம் மகாவித்தியாலயம் 1996ல் இடம்பெயர்ந்து ஸ்கந்தபுரத்தில் இயங்கிவந்தது 2000 ஆண்டு மாசி மாதத்தில் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்த இதில் முக்கிய பங்களித்தவர் கல்விக் கழகப் பொறுப்பாளர் திருஞானம் அவர்களும் அவர்தம் உதவியாளரும் பாடசாலை குறித்த காலத்தில் கொண்டு செல்வதற்கு ஆரம்பத்தில் விருப்பங்கள் குறைவாக இருந்தாலும் பின்னர் ஆதரவு கொடுத்தனர். முக்கியமாக இப்பாடசாலை உடனடியாக கொண்டு செலவ்பட வேண்டும் என ஒரு சில ஆசிரியர்களும் பாடசாலை ஊழியர்களும் முயன்றதன் விளைவாக கல்விக்கழகம், கல்வித்திணைக்களம் போன்றவற்றின் அனுசரணையுடன் போறாட் நிறுவனத்தின் உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மேற்பார்வையில் வான் தாக்குதல் அழிவு போன்றவற்றினால் பாதிப்புற்றிருந்த 12X25 அடி பிரதான மண்டபம் திருத்தப்பட்டது. இதற்கு முன்பாக கல்விக்கழகத்தின் ஆதரவில் 80X20 கட்டிடம் திருத்தப்பட்டு காரியாலயமும் திருத்தப்பட்டது. பழைய மாணவரினால் விஞ்ஞான கூடம் திருத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலை மீள் அமைப்பதில் முன்னின்று உழைத்தவர்களை இக்கிராமம் மறந்துவிடமுடியாது போறாட் நிறுவன பிரதிநிதி திரு கொட்வே இணைப்பாளர் திரு க: சாந்தலிங்கம் வெளிக்கள உத்தியோகத்தர் திரு நாவைக்குகராசா கல்விக்கழக பொறுப்பாளர் திரு. எஸ். ஞானம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உருத்திரபுரம் பகுதி இணைப்பாளர் திரு புலேந்திரன் உருத்திரபுரம் மேற்கு சமூக பொருளாதார மேம்பாட்டுக் குழுவின் தலைவர் திரு சிறிரங்கநாதன் மற்றும் இப்பாடசாலையின் ஆசிரியர்கள் இவர்கள் நெஞ்சில் நிறுத்த வேண்டியவர்கள்: உருத்திரபுரம் பகுதியில் முன்பள்ளி இல்லாத குறை நீக்கப்பட்டு நிரந்தரக் கட்டிடத்தில் முன்பள்ளி அமைத்து வருகின்றார்கள் சமூக பொருளாதாரக் குழுவினர்.

கடந்த 8-12-2000ம் ஆண்டில் புனரமைப்புச் செய்யப்பட்ட பிரதான மண்டபம் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் ஒளி விழா நிகழ்வும் கொண்டாடப்பட்டது: இந்நிகழ்வு உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் திரு சு. கணேசதாசன் தலைமையில் நடைபெற்றது. பிரதான மண்டபத்தின்பெயர்ப்பலகையை திரு சிறிரங்கநாதன் அவர்களும் பிரதான மண்டபத்தை போறாட்வன்னிப்பிரதிநிதி திரு கொட்வே அவர்களும் திறந்து வைத்தனர் இந் நிகழ்வில் வலயக் கல்விப் பணிமனையின் சார்பில் கலந்து கொண்ட திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு க: மா பத்மநாதன் சிறப்புரை நிகழ்த்தினார் பெற்றோர் சார்பில் திரு அ. அன்ரன் அன்பழகன் உரை நிகழ்த்தினார் ஒளிவிழா நிகழ்வுகளுடன் இனிதே நிறைவேறியது

மு. சண்முகராசா
கோட்டக் கல்வி அலுவலர்
பூநகரி

பாடசாலைக் கட்டிடம் மீண்டும் திருத்தப்பட்டு இயங்கிவருவது உருத்திரபுரத்தில் பொலிவூட்டுகின்றது: மீண்டும் உருத்திரபுரம் கிராமம் பொலிவுறத் தொடங்கியுள்ளது. வளர்ச்சிப்பாதையில் வீறு நடை போடுகின்றது: இப்பணியில் சகல மக்களும் தங்கள் சிரமத்தை பாராது ஒன்றிணைந்து அழிவுற்ற நிலையில் காணப்படும் இக் கிராமத்தை மீண்டும் புது ஒளி பெறச் செய்து வரலாற்றைப் படைப்போம் ''ஒற்றுமையே பலம்.

---

# இளந்தளிர்

மாவீரர் நாள் நினைவாக

## தாகம் உமக்கு தமிழீழம்

ஈழம் தந்த தவப் புதல்வர் - தமிழ்
ஈழம் காணப் போனீரோ
காலன் உருவாய் வந்த வினை - போர்க்
களத்தில் உயிரைப் பறித்ததுவோ
நாளை மலரும் தமிழீழம்
ஞாலம் வியக்கும் உம் செயலை
வாழப் போகும் தமிழுளனம்
மாவீரர் புகழைத் தினம் பாடும்
பார்க்கும் போது கல்லறைகள் - பல
நூறும் தெரியும் பொழுதினிலே
கேட்கும் போது உம் செயலை
மாவீரர் புகழைத் தினம் பாடும்
அழியும் ஒரு நாள் பூதவுடல்
மொழியும் பலவாய் தினந் தோறும்
வழியாய் போகும் சந்ததிகள்
மாவீரர் புகழைத் தினம் பாடும்
எதிரிப் படையை முடக்கி வைத்து
எதிர்த்து நின்றீர் வீரமுடன்
எதிர் பாரா வந்த வினையாலே
வித்தாய் ஆனீர் தாய் மண்ணில்
மாவீரர் இனத்தில் கல்லறை மேல்
வீசும் ஒளியின் சுடர் தன்னில்
சோரம் போகத் தமிழீழம்
கைகேல் காணம் போகின்றோம்
மையில் எழுதிக் குறை காணும் - உம்
மதித்தற்கரிய உமது செயல்
பொன்னில் எழுதி நிறை காணும்
மாவீரர் புகழைத் தினம்பாடும்
கடலில் களத்தில் கடும் சமரில்
தியாகச் சுடராய் மிளிர்கின்றீர்
திடலின் மீது ஒளியாக
மாவீரர் புகழைத் தினம் பாடும்
யாகம் ஒருநாள் முடிவு பெறும்
உம் தியாகம் பல்லாண்டு ஒளிவீசும்
தாகம் உமக்குத் தமிழீழம்
மாவீரர் புகழைத் தினம் பாடும்
புன்னைநீராவி

மரியதாஸ் யோன். அஜந்தா
விசுவமடு)

## கடைசிமூச்சு

ஒன்றல்ல ஓராயிரம் பேர்கள்
ஓரிரு நிமிடம் தான்!
புல்லரிக்க புல்லரிக்க
வெட்டியெடுத் கெம்மை அள்ளி...
குவித்தொரு "தீ'' யினுள் இட்டு
மகிழ்ந்திருப்பர் அப்போது...!
நாங்கள் எங்கள் மொழியில் கதறினோம்
ஐயோவென அலறி ''கை'' குவித்தொரு
-இறைவரம் கேட்டோம்
சண்டாளப் பரம்பரை
விட்டார்களா வெம்மை!
வெலிக்கடை தொட்டு
களுத்துறை யேறி
''பிந்துனு வெவ'' இரத்தமாய்...? ஐயோ
பாய்ந்து; துடித்து துடித்து குற்றுயிராய்...?
''கை'' விலங்கு மட்டுமல்ல...?
கடிவாள சிறைக்குள்ளே துடித்தபோதும்...!
''தீ'' வைத்தார் எம்மையெல்லாம் அந்தநேரம்;
அணு அணுவாய் உறவு, பாசம் அடக்கி-
நாமும்
கடைசி மூச்சு சாம்பலுடன் கலந்ததாச்சு
புதிய புன்னை நீராவியூர்

அருள் யோண்சன்

## மானம்

தாயின் மானம் காக்க அன்பு
மகன் ஆடையானான்
சேயின் மானம் காக்க அன்புத்
தாய் ஆடையானாள்
அண்ணலின் மானம் காக்க அன்புத்
தங்கை ஆடையானாள்
தங்கையின் உயிர் காக்க அன்பு
அண்ணன் ஆடையானான்
தாய் மண்ணின் மானம் காக்க
தமிழன் புலியானான்

## தேசம் விடிவதெப்போ

விடியும் விடியும் என்று விடியும்வரை
காத்திருந்தோம் விடியும் பொழுது
இங்கு இடியாக வந்ததென்ன

நம் தேசத்தின் விடிவுக்காய் தினம் தோறும்-
காத்திருந்தோம்

நம் தேசம் சுடுகாடாய் விட்டதை நாமறியோம்
வீட்டுக்குள் கொள்ளை வெளியே வந்தால்-
தொல்லை

தமிழனின் வாழ்வு வீதியிலே சாவு

பெண் தனியே சென்று விட்டால் கண்ணி-
வைத்து

பிடிக்கிறார்கள் வன்புணர்ச்சி முடிந்தவுடன்
மண் தோண்டி புதைக்கிறார்கள்
சிப்பாய்கள் கூட்டம் தப்பாட்டம் ஆடுது
தமிழர்களின் தலையை பந்தாகப் போடுது

காட்டிலுள்ள வானரங்கள் நாட்டினுள்நுழைந்-
தது

பேரினவாதத்தால் பெரும் துயர் கொடுத்தது
துயர் கொண்டமக்கள் துடித்துத் துவண்டார்-
கள்

தேச விடிவுக்காய் திசைமாறி சென்றார்கள்

ஒன்று சேருங்கள் ஒருமித்துவாருங்கள் தேசவிடிவு
-நம்கையில்

என்று அழைத்தது இரு கரங்கள்
இருள் சூழ்ந்த வானில் எழுந்தது ஒரு நிலவு
நம் தேசமெல்லாம் ஒளி வீசும் பெரும் நிலவு
தமிழர்கள் வாழ்க்கையில் வழிகாட்டும் ஒளிநிலவு
தலை வணங்காத் தமிழன் என்னும் தலைவர்
என்ற வெண்ணிலவு

அ: அன்னலட்சுமி (மணிமாலா)
ரங்கன் குடியிருப்பு,
ஜெயபுரம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒப்பாரி சொல்ல"

"எப்பிடியும் அவள் போகப் போறாள்" நான் தனிச்சுப் போகப் போறன் அவரால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை; கண்கள் கட்டுப்பாட்டை மீற நீர்த்துளிகள் வரண்டு காய்ந்து போன கன்னங்கள் வழியாக வடிந்து கொண்டிருந்தது.

ப. நோ. கூ. சங்கம் ஒன்றின் காவலாளி என்பதால் அந்த இரவு நேரத்தில் யாரும் இல்லாமையால் அவரது மனம் கட்டுப்பாட்டை மீறியது, வாழ்க்கை சக்கரத்தின் எத்தனை தெழிவு சுழிவுகளுக்கு தோள் கொடுத்தாள் எனக்காக எத்தனை நாள் பட்டினி கிடந்தாள், தன்னால் முடிந்த வரை எனக்காகவே வாழ்ந்தாளே? அவள் சாகப் போறாள்! நான் வாழப் போறன்: இது என்ன நியதி "இறைவா அந்த ஜீவனை வாழ விடப்பா இல்லையோ என்னையும் எடுத்துவிடு நான் எப்படித்தான் கத்தினாலும் உனக்கு கேட்காது" என்றவர் தனது சேட் பொக்கேற்றை ஒருதரம் தட்டிப்பார்த்தார். கைகளுக்குள் ஏதோ ஒன்று நருடியது அது வேறு எதுவும் அல்ல, கரும்புத் தோட்ட பிள்ளையார் கோயிலுக்கு கொடுக்க வேண்டிய கற்பூரம்தான் மனதில் ஒரு திருப்தி விடிந்ததும் பிள்ளையார் அப்பாட்ட போய்த்தான் ஆஸ்பத்திரிக்கு போகவேணும் என தீர்மானித்தவர் அருகில் உயிரை விடுவதுபோல் உறங்கிக்கொண்டு இருக்கும் லாம்பினை தீண்டிவிட்டு வெளியே எட்டிப்பார்த்தார். வானம் இருளத்துவங்கியது மின்னல்கள் இடை இடையே வெட்டியது. சற்று நேரத்துக்கெல்லாம் சோ... என மழை பெய்யத் துவங்கியது.

மணியண்ணை அந்த சுவையகத்தின் மூலையில் சாக்கை விரித்துவிட்டு மெதுவாக அமர்ந்து கைகளை மார்புக்கு குறுக்கே கட்டிக்கொண்டு தாவாரத்தில் சிதறும் தண்ணீரை பார்த்துக்கொண்டு இருந்தார். "ஒருமுறை இப்படித்தான் மழைபெய்யோ பெய்யென்று பெய்து குளம் நிறைஞ்சு குளம் கவிண்டு பாஞ்சு வான்கட்ட உடைச்ச நேரம், எனக்கு சரியான காய்ச்சல். சாகக்கிடந்தனான் ஆஸ்பத்திரியில அந்த நேரம் என்ர "அவர் கண்கள் நீரை சுரக்க" மனிசி குடையும் இல்லாமல்] மணியங்குளத்தில இருந்து நடந்து வந்தாளே? அவரால் அந்த நினைவுகளை மீட்டுக் கூடப் பார்க்க முடியவில்லை, தன்னலம் அற்ற அவளுக்கு நான் எந்த மூலைக்கு?

அந்த நேரத்தில் நான் நல்ல நடிகன் எவ்வளவுதான் வீட்டில கஷ்டம் எண்டாலும் நாடகம் போடுறது எண்டால் அது ஒரு தனிக்கலை அந்த நேரத்தி அரிவு வெட்டு எண்டாலும் சூடு அடி எண்டாலும் சரி தம்பை மணியண்ணையின்ர குவாட்டேஇல நாடகம் பழக துவங்கினால் சரி வீட்டுச் சிந்தனையே மறந்து நிப்பன் அதால எனக்கு "சிப்பாய் மணியம்" எண்டு பட்டப் பேரும் வைச்சிற்றினம் ஆனா அந்த நேரத்தில நாலு பிள்ளையளும் சின்னனுகள் அதுகளையும் வைச்சுக்கொண்டு வேலைக்கு போய் அடுப்பை மூட்டினவளின்ர மூச்சா இன்று நிக்கப்போகுது?

இறைவா எனக்கு தலைவலி என்டால் தண்ணிகூட குடிமாம நிப்பாளே, அவள் சாகப் போகிறாள்? அனாதை மாதிரி தனிய கட்டிலில கிடக்கிறாளே அவளின்ர மனம் என்னபாடுபடும் மூத்தவன் ரவி பாவம் அவன் எத்தினைக்குத்தான் ஒருவன் அவன் குடும்பகாரன் மற்றவன் பாஸ்கரன் எல்லைக்கு போயிட்டான் மூண்டாவது இந்தியாவில எங்கை எண்டே தெரியாது கடைசி மகள் பாப்பா... பாப்பா எண்டு செல்லமா வைச்சிருந்தம் அவள் இயக்கத்துக்கு போயிட்டாள் அதில இருந்து தானே வருத்தம் தொட்டுது. சாப்பாடு தண்ணி வென்னி இல்லாமல் கிடந்து இண்டைக்கு என்ன வருத்தம் எண்டே தெரியாமல் முகமெல்லாம் வெள்ளையடிச்சு போய் கிடக்கிறாளே? என்ர ஆச்சி "அணே" என்னை விட்டுட்டுப் போகப் போறியா?

## - சிறுகதை -

கடும் மழையில் அடிபட்டு ஒரு வயதான பெட்டை நாய் ஒன்று ஓடிவந்தது அது மணியண்ணைக்கு எதிர் மூலையில் கூனிக் குறுகியது. மழைக்குளிரில் நடுங்குவதை பார்க்க மணியண்ணனுக்கு பாவமாக இருந்தது. அந்த நாய் யாருக்குமே சொந்தமில்லை என்பதும் அவருக்கு தெரியும். மனிதன் மட்டும் யாருக்குத் தான் சொந்தம்? பெற்ற தாய் சொந்தமா வளர்த்த தந்தை சொந்தமா? கூடிப்பிறந்த சகோதரங்கள் சொந்தமா? பெற்ற பிள்ளைகள் சொந்தமா? யாரும் யாருக்கும் சொந்தமில்லை போலியான நடிப்பு தான் உயிர் கூட்டில் இருக்கும்வரை பல உறவுகள் வரும் இறந்து விட்டால் எரிக்கும் வரை வரும் அவ்வளவு தான் பின் எல்லாமே முடிந்த முடிவுகளாக மாறிவிடும் இதுதான் மனிதவாழ்வு இதைவிட யாருக்குமே சொந்தமில்லாத இந்த நாயின் வாழ்க்கை மேலானதாக மணியண்ணனுக்கு பட்டது!

அவன் அவசர அவசரமாக அலுவலகத்தினுள் நுழைந்தான் மணியண்ணரை பார்த்து புன்னகைத்து விட்டு சென்று கொண்டிருக்கும் போது சபாநாயகம் மறித்து என்னபிசியா...... எனக் கூறி பரிதாபமாக ஏறிட்டான் அதை புரிந்து கொள்ள அவனால் முடியவில்லை ஆனாலும் நடப்போடு கைகளை பற்றிய போது சபாநாயகம் சொன்னார் "மச்சான் மணியண்ணையின்ர மனைவி ஆஸ்பத்திரியில் போயிட்டாவாம்" "அவன் எங்க" என எடுக்கும் போது வழியில் மணியண்ணையை சந்தித்தான் ஒரு சிப்பாய் மணியண்ணையின்ர அவன் கூறி முடிப்பதற்குள் சபாநாயகம் ஆம் என தலை அசைத்தான். இருவருக்கும் இடையில் சில நிமிடங்கள் மௌனம் பின் சபாநாயகம் சொன்னான் மச்சான் மணியண்ணை நேற்று ஆஸ்பத்திரியில் இருந்து வந்து சொன்னார் தம்பி அம்மாவுக்கு சுகம் வரும் போல தெரியேல்ல எல்லாம் அந்த இறைவன் தான் பாக்கோணும் எல்லா கோவிலுக்கும் என்னால முடிந்த கற்பூரத்த கொழுத்திக் கொண்டு வாறன் எண்டு செண்டு கட்டி கற்பூரத்த எடுத்து காட்டி இது கரும்புத் தோட்ட பிள்ளையாருக்கு வைச்சிருக்கிறன் என்டு சொன்னவர் என கூறும் போது அவனது கண்கள் கலங்க வேறு திசையை நோக்கினான் சபாநாயகம் இவன் தலையை குனிந்து கொண்டான்.

அவர்களுடன் அமைதியாக மணியண்ணனும் வந்து நின்ற போது இவாவுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை ஓவென்று ஒப்பாரி சொல்ல வேண்டும் போல் இருந்தாலும் மணியண்ணனுக்கு ஆறுதல் கூற வேண்டியவனாக அவரது கரங்களை பற்றி இறுக்கி பிடித்தான். "தம்பி G M ஐயாட்ட என்னையும் கதிரையுக் கேட்டுப் பார்ப்பம் எண்டு வந்தனான் அவரகாணேல்ல தலைவர் ஐயாவையும் காணேல்ல" என அவர் கூறி முடிப்பதற்குள் இருவரும் மோட்டார் சயிக்கிலில் வந்து சேர்ந்தார்கள் மணியண்ணரை அவர்களிடம் அனுப்பி விட்டு சபாநாயகத்துடன் மொத்த நிலையத்துக்கு செல்லும் போது பழைய நினைவுகள் அவனை வாட்டியது அம்மா வழியில் கண்டால் போதும் தம்பி ராசா எப்படி இருக்கிறாய் என்டு கேக்காம போகமாட்டா என்ன வாழ்க்கையடா இது என மனதுக்குள் எண்ணிக் கொண்டு நடந்தான்.

நீண்டவளைவுகளுக்குள்ளால் ஒருமாதிரியாக மரணச் சடங்கு நடைபெறும் வீட்டை அடைந்த போது ஒரு வாங்கிலில் பெட்டிக்குள் அமைதியாக உறங்கி கொண்டு இருந்தாள் அம்மா?

மணியண்ணனின் உறவுகள் என்று பெரிதாக கிளிநொச்சிக்கு வரவில்லை எல்லாம் கண்டியில் தான் பழகிய உறவுகள் தான் ஒரே ஒரு பெண் பிள்ளை அவாவும் இப்ப இல்ல அதனால் அமைதியாக காணப்பட்டது ஒப்பாரி சொல்ல யாரையும் காணவில்லை மணியண்ணன் மணியங்குளத்தில் தான் கூடியகாலம் வாழ்ந்ததால் அவர்களுக்கு தகவல் அனுப்பிவிட்டு தனிமையில் அமர்ந்திருந்தார் அயல் வீட்டார்கள் அங்கும் இங்குமாக காணப்பட்டார்கள், ரவியின் மனைவி மட்டும் அழுது ஓய்ந்திருந்தாள் "தம்பி இந்த மீசையும் சபாவும் வந்தால் காணும் எல்லாம நல்லபடியா நடக்கும்" எனக் கூறிவிட்டு வீதியை வெறித்துக் கொண்டு இருந்தார் அவரை பொறுத்த மட்டில் வசதியும் இல்லை உறவுகளும் இல்லை இந்த நிலையில் அவருக்கு உதவ ஊர் மக்களும் சங்கத்துப்பணியாளர்களும் தான் என அவர் தீர்மானித்து விட்டார்.

சில நிமிடங்களில் சங்கத்து உழவு இயந்திரம் வாழைமரத்துடன் வந்து நின்றது மணியண்ணனின் மனதில் ஒரு பாரம் குறைந்தது இனி அவருக்கு தோள் கொடுக்க பலபேர் வருவார்கள் கண்கள் நீரை வார்த்தன, அவர் எதிர்பார்த்த மணியங்குளத்து மக்கள் வந்து சேர்ந்த பின் தான் ஒப்பாரி ஒலி எழுந்தது அது வரை அமைதியாக கிடந்த மணியண்ணனின் மனம் மீண்டும் பிரிவின் வேதனையை உணரத் துவங்கியது என்னதான் கட்டுப்படுத்தினாலும் விம்மல்கள் வெடித்து உதடுகள் கதறின! உறவுகள் அற்றாலும் கூட்டுறவின் சேவையிலும் ஒருபடி மேலே சென்று தனது பணியாளரின் துக்கத்திலும் தோள் கொடுப்போம் என பணியாளர் முன்னே நடக்க பறை முழங்க அச் சங்கத்தின் உழவு இயந்திரம் அம்மாவின் உடலுடன் இறுதி ஊர்வலமாக நகர்ந்து கொண்டு இருந்தது. இது வரை மணியண்ணனை வாட்டிக் கொண்டிருந்த பெரும் பாரம் நீங்க தானும் அந்த சங்கத்து பணியாளர் என மனதுக்குள் பெருமையாக எண்ணிக் கொண்டார்.

S. ஆதவன்

# போராட்டம் (உருவகக்கதை)

மாலை 6 மணி இருக்கும் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. கதிரவன்மறைந்து கொண்டிருந்தான் டும்... டும் வெடியோசை, காட்டுமருகங்கள் பயந்து ஓடின, வேடன் மான் ஒன்று சுட்டு இழுத்துச் சென்றான் மிருகங்களுக்கிடையே பரபரப்பு நாம் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று முயலார் கூறினார் இதற்கு என்ன செய்யலாம் என்று நரியார் கேட்டார் எல்லா மிருகங்களையும் அழைத்து மகாநாடு ஒன்றைக் கூட்டி அதன் மூலம் தீர்வு காண்போம் என்றனர் மகாநாடு ஆரம்பம்.

மிருகங்களில் பெரியவனும் பலம் மிக்கவனுமான யானையாரே தலைமைதாங்கினார் வணக்கத்துடன் மகாநாடு ஆரம்பம் இன்று இந்த மகாநாட்டிலே பார்வையாளராகவும் பேராளர்களாகவும் வந்திருக்கும் காட்டு மிருகங்களுக்கும் வீட்டு மிருகங்களுக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு இந்த மகாநாடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்; காலம் காலமாக மனிதன் எமக்குச் செய்யும் கொடுமையை கண்டிக்க அவன் அதை நிறுத்த வேண்டும் இல்லாவிடின் நாம் மனிதனுக்கெதிராகப் போராட வேண்டும் என்று யானையார் தலைமை உரையை முடித்து அமர்ந்தார். அடுத்து முயலார் எழுந்தார் சிறியவன் ஆனாலும் புத்திசாலி உள்ளவன் தந்திரத்தோடு பேசினார். நாம் அவனுக்கு என்ன கொடுமை செய்தோம்.

ஏன் எம்மை அவன் கொல்ல வேண்டும்? நாம் போர் பயிற்சி எடுத்து அவனுக்கு தகுந்த அடி கொடுப்போம் என்று கூறி அமர்ந்தார் மிருகங்களுக்கிடையில் பரபரப்புக்கள் குசுகுசுத்தன அடுத்து சிங்கராசா எழுந்தார் ஒரு பெரும் கர்ச்சனையுடன் வணக்கத்தை தெரிவித்தார் நாம் படைதிரட்டி பயிற்சி அளித்து மனிதன் வாழ் இடங்களுக்கு சென்று தகுந்த அடி கொடுத்து அவனை விரட்ட வேண்டும் இதுதான் நாம் அவனுக்கு கொடுக்கும் பெரும் பரிசாக இருக்கும் என்று காரசாரமாகவும் ஆவேசமாகவும் பேசியமர்ந்தார். சிங்கராசா கூறியதை புலிமாமாவும் ஏற்பது போல் தலை அசைத்தார் அடுத்து வீட்டு மிருகமான மாடார் எழுந்தார் வணக்கத்தை கூறினார். சிங்கராசா கூறியது போல் மனிதனுடன் சண்டையிட முடியாது அது கோழைத்தனம் அவனுக்கு எம்மை அழிப்பதற்கு இலகுவான வழி அதாய் இருக்கும் மனிதனோ புத்திசாலி நவீன ஆயுதம் வைத்திருக்கிறான் அவனோடு நேரில் போராட முடியாது நான் அவனுடன் அன்றும் போலும் வாழ்ந்து வருகிறோம் கைவிலங்கிட்டு எம்மை வைத்திருக்கிறான் சுதந்திரமாய் உண்ணக்கூட விடுறானில்லை பாலை கறந்து குடிக்கின்றான் எனது பிள்ளைக்கு கூட விடுறானில்லை சிறிய கொடியில் பெரியபூசனிக்காய் காய்க்கும் எண்ணம் சிலரிடம் உண்டு அப்படி எண்ணினால் அது மடமைத்தனம் அவனுடன் நேரில் சண்டையிட முடியாது; நாம் எல்லோரும் ஊர்வலம் ஒன்றை நடத்தி மகஜர் ஒன்றை மனிதனுக்கு அனுப்பி வைப்போம்

கருணைமதி

## சிரிக்க....... சிந்திக்க

★ நான்கு வயதுச் சிறுவனைப் பார்த்து ஆசிரியர் கேட்டார் "உன் வயது என்ன?
"நான்கு"
சரி உன அண்ணாவினுடைய வயது என்ன?
"பத்து"
உன் அக்காவின் வயது என்ன?
சொல்லமாட்டேன் சொன்னால் நீங்கள் அடிக்கடி வீட்டிற்கு வந்து விடுவீர்கள்.

★ இரண்டு மாணவர்கள் எதோ குறும்பு செய்து விட்டனர் இதைக் கண்டு கோபம் கொண்ட ஆசிரியர் அவர்களைப் பார்த்து "இரண்டு பேரும் தன் தன் பெயரை இருநூறு முறை எழுத வேண்டும்" என்று கட்டளை இட்டார் சிறிது நேரத்தில் ஒரு மாணவன் அழுது கொண்டு சார் இது ரொம்ப அநியாயம் அவன் பெயர் விஜி என் பெயர் லாலலோலலௌல வேங்கட பாலசுப்பிரமணிய வேந்தன்" என்றான்.

★ வினோ:- நாம் ஏன் சாலமனை உலகத்திலே சிறந்த அறிவாளி என்று அழைக்கின்றோம்
கஜி:- அவருக்கு அறிவுரைகூற ஏராளமான மனைவியர்கள் இருந்தார்கள் வினோ!

★ ஆசிரியர் மாணவர்கள் விலங்குக்காட்சிச்சாலைக்கு அழைத்துச் சென்றார் அங்கே இருந்த மானைக்காட்டி "பவி" இதன் பெயர் என்ன என்று கேட்டார்; அதற்கு அந்த மாணவன் எனக்குத் தெரியாது சார் என்றான்.
"உங்கம்மாவை உங்கப்பா என்னென்று கூப்பிடுவார் சொல்" என்று கேட்டார். இந்தப் பெயரை நீங்க சொல்ல வேண்டாம் நானே சொல்றேன் கழுதைதானே சார்" என்றான் அந்த மாணவன்

கலைவாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு வலுவான வழிகாட்டல்கள் அவசியம்

### கூட்டுறவுச்சங்கங்களில் கணக்கு வைத்தல் தேவைஏற்பாடுகள்

கூட்டுறவு நிறுவனங்கள் கூட்டுறவுக் கொள்கையின் கீழ் செயல்படும் நிறுவனங்களாக இருப்பதினால் உறுப்பினர்களுக்கும் அவர்களில் தங்கி இருக்கும் எதிர்கால உறுப்பினர்களுக்கும் பாவனையாளருக்கும் சேவையாற்றுகின்றது. ஒவ்வொரு வகையான கூட்டுறவு நிறுவனமும் பதிவு பெற்ற துணைவிதியின்கீழ் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துகின்றது.

ஒவ்வொரு கூட்டுறவு நிறுவனமும் கூட்டுறவுச் சங்க சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றமையாலும் இவைகளின் சுயமான தொழிற்பாடுகள் காரணமாக சேவையாற்றுகின்றன கூட்டுறவு நிறுவனங்கள் ஏனையசட்டங்களின்கீழும் கட்டுப்பட்டே செயல்பட்டு வருகின்றது 1972-ம் ஆண்டின் கூட்டுறவுச்சங்கங்கள் சட்டத்தின் கீழும் 199 -ம் ஆண்டின் 11-ம் இலக்க திருத்தச் சட்டத்தின்கீழும் 1983-ம்ஆண்டு 32-ம் இலக்க திருத்தச்சட்டத்தின் மூலம் 1973-ம் ஆண்டின் விதிகளுக்கு கீழும் கூட்டுறவு நிறுவனங்கள் கணக்கு வைத்தல் தேவைப்பாடு வலியுறுத்தப் பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் கணக்கு வைத்தலுக்கான கொள்கைமுடிவுகள் கூட்டுறவு ஆணையாளரினாலும் பதிவாளரினாலும் விதந்துரைக்கப் பட்ட அத்தகைய பதிவேடுகளிலும் படிவங்களிலும் வைத்துவரவேண்டுமென விதி கூறுகின்றது.

கூட்டுறவுநிறுவனங்கள் பல்வேறு பொருளாதார சூழலில் செயற்படுவதினால் விற்பனை வரித்தடை, வியாபார புரள்வுவரி, வருமானவரி, முத்திரைவரி, பாதுகாப்புவரி இவற்றை உரியகாலத்தில் செலுத்துவதற்காக கணக்கிட்டு செய்து அறிக்கைகள் கூட்டுறவு திணைக்களத்துக்கு சமர்ப்பிக்க கடப்பாடு உடையவையாக இருக்கின்றன.

இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வியாபாரவரி, புரள்வுவரி, வருமானவரி, விற்பனை வரி செலுத்துவதற்காக காலாண்டு அரையாண்டு, ஓராண்டு அறிக்கைகள் தயாரித்து சமர்ப்பிக்கின்றன.

காலால்பகுதித் திணைக்களத்துக்கு அலகுரீதியிலும் பெறுமதி ரீதியிலும் அறிக்கைகள் கையளிப்பதற்காக தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்க நிதியாண்டுகள் 12 மாதங்களை உள்ளடக்கிய காலப்பகுதியாக இருப்பதிலும் அவை ஆங்கில பஞ்சாங்க ஆண்டு ஒன்றிற்குரியவையாக இருப்பதில்லை நிதியாண்டுகள் இரண்டு ஆண்டுகள் சம்பந்தப் பட்டவையாக இருக்கின்றது ஆகவே கணக்கு வைத்தல் தேவை இன்றியமையாததாக உள்ளது கூட்டுறவு நிறுவனங்களின் நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம், காலாண்டு, அரையாண்டு, நிதியாண்டு ரீதியாகவும் அல்லது குறித்துரைக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தற்குரிய காலப்பகுதியாகவும் கணக்குகள் இட்டுக்கட்டப் பட்டு பதிவு செய்யப்படுகின்றன கணக்குபதிவுகளுக்கு பின்னரே பௌதிக முன்னேற்றம், நிதிமுன்னேற்றம் பெறுபேறுகள் ஒப்பிடலாம் கணக்கு வைப்பின்போது உண்மைத் தன்மை நம்பப்படுதன்மை, பயன்பாடு, உறுப்பினர்கள் வைப்புபணம் இட்டவர்களுக்கு, கடன்கொடுத்தோருக்கு நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் தேய்வுக்கு உரிய தீர்மானம் எடுப்பதற்கு இயலும்.

### கூட்டுறவு நிறுவனங்களில் வளங்களும் கட்டுப்பாடுகளும்

இலங்கையின் கூட்டுறவு நிறுவனங்களின் வளங்கள் மனித வலு பணம் பொருள்கள் இயந்திரங்கள் என்ற வகை வளங்களில் வகுத்துக் தொகுக்கலாம் கூட்டுறவு நிறுவனங்களின் வகைக்கு ஏற்ப உறுப்பினர்களின் பொருளாதார சமூக கலை மேம்பாட்டுக்கான நோக்கங்களைக் கொண்டும் ஒவ்வோர் ஆண்டுத் திட்டங்களிலும் இவ்வளங்கள் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றது, என்பதைப் பொறுத்து கட்டுப்படுத்தப்படும்.

கூட்டுறவு நிறுவனங்களில் சொத்துக்கள் நிலையான சொத்து முதலீடு நடைமுறைச் சொத்து ஏனைய சொத்துக்கள் என தொகுக்கும் பொழுது மேலே கூறிய நான்குவகை வளங்களும் இவை ஒவ்வொன்றுக்குள்ளும் இடம் காணக்கூடியதாக இருக்கும் கூட்டுறவு நிறுவனங்கள் மேற்படி சொத்துக்களின் வகை வளங்களைப் பெருக்கிக் கொள்வதற்காக உரிய நிறுவனத்தின் அனுமதியையும் துறைசார் திணைக்களத்தின் அனுமதியையும் பெற்றுக் கொள்ள வேண்டும் கூ.ச.சட்டம், விதி துணைவிதி சொத்துக்களை கொள்வனவு செய்யும் பொழுதும் குத்தகைக்கு பெறும் பொழுதும் வாடகைக்கு பெறும் பொழுதும் கூட்டுறவு நியதிச்சட்ட அனுமதியைப் பெறுவதோடு அது தொடர்பான சட்டங்களின் கீழான அனுமதியை உரிமம் என்ற அடிப்படையில் பெற்றுக் கொள்ள வேண்டும். கூட்டுறவு நிறுவனங்கள் காணி கட்டிடம், பொறி விருட்சம் தளபாடம், பொருத்திகள், உபகரணங்கள், மோட்டார்வண்டிகள் சொந்தமாக்கிக் கொள்ளும் பொழுதுபொதுச் சட்டத்தின் கீழ் அவை பதிவு செய்யப்படுகின்றன காணிகளைப் பெறும் பொழுது உறுதிகளும் பதிவு வழி உரிமைகளும் சரிபிழைபார்த்து மதிப்பீட்டு அறிக்கைகளுக்கு அமைய அனுமதிக்கப்படும்.

### நிலக்கொள்வனவும் விற்பனவும்

இலங்கையில்நிலகொள்வனவுவிற்பனவு தொடர்பிலான அடிப்படைத் தேவைப்பாடுகளில் மோசடி தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் கீழ்வரும் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுவந்தால் ஒழிய ஒரு கொள்வனவோ விற்பனையோ சட்டத்தின் எந்த விளைவையும் பெறமாட்டாது.

அ) உடன்படிக்கை ஆவணம் எழுத்தில் இருத்தல் வேண்டும், ——உறுதி

ஆ) மாற்றம் செய்து கொண்ட கட்சிக்காரர்களினால் ஒப்பம் வைக்கப்படல் வேண்டும்

இ) நொத்தாரிசு முன்னிலையிலும் இரண்டு சாட்சிகளின் முன்னிலையிலும் ஒப்பம் இடப்படல் வேண்டும்.

ஈ) ஆவணத்தை நிறைவேற்றல் ஆனது அந்த நொத்தாரிசினால் நிறைவேற்றப்படல் வேண்டும்.

### பதிவின் நோக்கங்கள்

அ) சொந்தத்தை பகிரங்கப்படுத்தல்

ஆ) மோசடியைத் தடுத்தல்

இ) ஆவணத்தின் உண்மைத் தன்மையை நிலைநாட்டல்

உறுதி ஒன்றின் பதிவானது இக்குறிப்பிட்ட காணியின் சொந்தம் யாருக்கு உரியதைக்காட்டி நிற்கும் என்பதுடன் கொள்வனவுக்காரர் அதுவரை அவ் ஆவணத்தின் மீது நடைபெற்ற நடவடிக்கைகளை அறிந்து கொள்ள உதவிபுரியும்.

சட்டமானது ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது கட்டளைச் சட்டத்தின் 7ம் பிரிவு மிகமுக்கியமானது ஆகும் 7ம் பிரிவின்படி 1-1-1884 இன் பின்னர் நிறைவேற்றப்பட்ட எந்த ஆவணமும் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழிய பெறுமதியான பணப் பெறுமதிக்கு வாங்கப்பட்டு அதன் பின்னர் பதிவு செய்யப்பட இன்னுமோர் ஆவணத்தின் மீதும் கட்சிக்காரர் கோரும் கோரிக்கைக்கு எதிராகதள்ளி வைக்கப்படக் கூடியதாகும். பின்னைய பதிவானது மோசடி மூலம் பெறப்பட்டிருந்தால் நியதிச் சட்டத்தால் கொடுக்கப்பட்டிருக்க முன்னுரிமை தோற்கடிக்கப்படலாம்.

வி. ஜெகநாதன்
பதில் பொது முகாமையாளர்
ப.நோ.கூ.ச; துணுக்காய்

7ம் பிரிவின் முக்கியநோக்கம் என்னவெனில் முன்னர் பதிவு செய்யப்பட்டிருந்த அல்லது பின்னைய பதிவின் பின்னர் பதிவு செய்யப்பட்ட ஆவணத்துக்கு எதிராக பின்னைய பதிவுக்கு முன்னுரிமை கொடுப்பதோடு நிலத்துடன் தொடர்பான எல்லா ஆவணங்களையும் முறையாக பதிவு செய்ய நிர்ப்பந்திப்பதாகும்.

# தை பிறக்கும் ஆனால் வழி பிறக்குமா?

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது எமது மூதாதையோரின் அசையாத நம்பிக்கையாக நீண்டு நிலைத்து நிற்கிறது ஒவ்வொரு வருடமும் தாம்பட்ட துன்பங்கள் துயரங்கள் நீங்கி புதிய ஆண்டில் புதுவாழ்வு மலரும் என்று நடைமுறை ஆண்டின் இறுதிக்காலப்பகுதியில் மக்கள் கருதிகொள்ளும் ஒருபுதிய தெம்பாகவே அவ்வாக்கியம் அமைகிறது. ஆனால் போரையும் அதன் சுமைகளையும் சுமந்து நிற்கும் எம்மக்களின் மனங்களும் இவ்வாறே ஒவ்வொரு மார்கழி மாதமும் பெரிய எதிர்பார்ப்புக்கள் பின்பு ஏமாற்றம் எனக் கழிந்து செல்கின்றன.

இவ்வாறு தான் சமூகத்தில் ஆழ வேரூன்றி விழுதெறிந்த ஆலமரமென காட்சிதந்த கூட்டுறவு நிறுவனங்களில் வன்னியில் செயல்படும் கூட்டுறவு சார்ந்த அமைப்புக்கள் இன்று ஆட்டம் கண்டு நிற்கின்றன. இந்த விருட்சத்தின் நிழலின் ஒதுங்கி நிற்கும் பணியாளர்களின் நிலையும் தை பிறந்தால் வழி கிடைக்குமா? என்றநிலையாகவே உள்ளது.

கடந்த 1999 மார்கழியில் வெளியிடப்பட்ட கூட்டுறவு பணியாளரின் சம்பள உயர்ச்சி தொடர்பான சுற்றறிக்கை இதுவரை நடைமுறைக்கு கொண்டுவரப்படாமை இவ்வாறான ஏமாற்றத்திற்கும் எதிர்பார்ப்புக்கும் காரணமாய் அமைந்துள்ளன. மேற்படி சுற்றறிக்கை தொடர்பாக ஆளணி அங்கீகாரம் தொடர்பான சர்ச்சைகள் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டப்பட்டாலும் இன்று ஆளணி அங்கீகாரத்தை பெற்றுள்ள அமைப்புக்கள் கூட இவற்றை வழங்கவில்லை.

இங்கே தான் சங்கத்தின் இலாப நட்டம் தொடர்பான விடயமும் ஆராயப்படுகின்றது. எனவே நட்டத்தில் இயங்கும் நிறுவனத்தில் கூடிய சம்பளத்தை பெற்று அதை மேலும் நட்டப்படுத்த வேண்டும் என்ற எண்ணப்பாடு எந்தப்பணியாளர் மனதிலும் ஏற்படப்போவதில்லை; ஆனால் அரச நிறுவனங்களோடு ஒப்பிடுகையில் மிகக் குறைந்த சம்பளத்திட்டத்தை பெறும் இக் கூட்டுறவு பணியாளர்களின் விடுமுறை நாட்களும் மிக சொற்பமானவை அத்தோடு வருடாந்த சம்பள உயர்ச்சி மிக மிக குறைவானது. அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பள உயர்வுகள் போன்று கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

எனவே இவர்கள் கடமையாற்றும் காலப்பகுதியில் அறவிடப்படும் தொகையைக் கொண்டு பணிவிலகும் காலத்தில் கிடைக்கும் ஊழியர் சேமலாபநிதி ஊழியர் நம்பிக்கை நிதி என்பனவே இவர்களுக்கு இறுதி நேரத்தில் கிடைக்கக்கூடிய நன்மையாக இருக்கின்றது அரச ஊழியர்களுக்குள்ள ஓய்வூதியத் திட்டம் கூட இவர்களுக்கில்லை

இவ்வாறான கட்டமைப்பினைக் கொண்ட கூட்டுறவு ஊழியர்களின் தொழில் சார் நடவடிக்கையில் ஏற்படும் ஒழுங்கீனத்திற்காக அப்பணியாளர் மீது நடவடிக்கை எடுப்பதற்காக தேடி எடுக்கப்படும் அரசாங்க சட்ட விதிகள் அல்லது சட்டக்கோவைகள் அதே பணியாளர்களின் நன்மைக்காக பார்க்கப்படாமை வேதனைக்குரியதே; ஏனெனில் இன்னும் சில கூட்டுறவு அமைப்புக்களில் பணியாளருக்குரிய ஊழியர் சேமலாபநிதி ஊழியர் நம்பிக்கை நிதி என்பன ஒழுங்கான முறையில் அனுப்பப்படாமல் இருப்பதும் இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகவே உள்ளது.

கூட்டுறவுப் பணியாளரின் சம்பள விடயம் தொடர்பான பல செய்திகளை சங்கமம் ஏற்கனவே பிரசுரித்திருக்கின்றது: இவற்றினூடாக ஊழியர் தொழிற்சங்கங்கள் விட்ட தவறை சங்கமம் ஓரளவு நிவர்த்தி செய்துள்ளதெனக் கொள்ளலாம்.

எது எப்படியாயினும் பணியாளரின் அதிகரித்த சம்பளப்படியை வழங்க கடந்த ஒருவருடமாகவும் முடியாமல் போனது என்றால் இந்த காலப்பகுதிக்குள் கூட்டுறவு அமைப்புக்களின் செயற்திறனை மேம்படுத்த இயலாமல் போயுள்ளது என்றால் அமைப்பில் அங்கத்தவர் அல்லாமல் நுகர்வோராய் வருவோர், போவோர் எல்லோரின் கேள்விக்கும் பதில் சொல்லி அமைப்பை நிர்வகிப்போரின் சொல்லை தலைமேல் ஏற்று செயற்படும் பணியாளர்களால் இந்தப்பாரத்தை இன்னும் எவ்வளவு காலம் சுமக்க முடியும். இதில் இருந்து விடுபட வழிகிடைக்காதா? என்பதே கூட்டுறவுப் பணியாளரின் இன்றைய எதிர்பார்ப்பாகும்......

காவலூர்ச்செல்வம்

# சாரணன் உலக சகோதரன்

சாரணர்கள் உலகம் முழுவதும் கவர்ந்து பரந்து வாழ்வது நீங்களும் அறிந்து இருப்பீர்கள். இருந்த போதும் இவ் இயக்கத்தைப் பற்றி இன்னமும் புரிந்து கொள்ளாத சமுதாயம் இன்றும் உள்ளது இதனை நாம் அறியக் கூடியதாகவே இருக்கின்றது நன்மை செய்யவும், நலன் புரியவும் பல இயக்கங்கள் உருவாகிய போதும் சாரணிய செயற்பாட்டில் உள்ள சிறார்களைப் போன்று சிறப்பான பணிகளைச் செய்துவரும் இயக்கங்களும் உள்ளன.

பள்ளிப் பருவத்தில் துள்ளித்திரியும் மாணவப் பருவத்தில் ஆரம்பிக்கும் இந்த சாரணியம் பெற்றோரின் அனுமதிக் கடிதத்துடன் ஒவ்வொரு பாடசாலையிலும் சாரணர் குழுவில் அங்கத்தவன் ஆகின்றனர். இவ்வாறு இயங்கிவரும் சாரணியம் உலகில் 145 நாடுகளில் ஆல்போல் வளர்ந்து அறுகு போல் வேரூன்றி உள்ளது இவ் இயக்கம் இவ்வாறு வளர்வதற்கும். உருவாகுவதற்கும் அடித்தளம் அமைத்தவர் சாரணியத்தந்தை பேடன் பவல் அவர்கள் ஆகும்; 1857-02-22ம் திகதி பிறந்த இவர் வாழ்க்கைக்கான அனுபவத்தினை வைத்து 1907ம் ஆண்டு 20 சாரணர்களுடன் இங்கிலாந்தில் உள்ள பிறவுன்ஸி தீவில் முதற்பாசறை நடைபெற்றது இதுவே முதல் உலக பாசறை ஆகும். பின் இவர் உலகப் பிரதமர் ஆகிக் கொண்டார் இதன்பின் சகல நாடுகளுக்கும் பரவியது ஆலம் வித்தைப் போன்று இருந்த சாரணியம் இன்று ஆலம் மரத்திற்கு ஒப்பாகும் அளவிற்கு பரந்து விரிந்து உள்ளது.

சாரணிய சேவையில்
யோ. கேதீசன்
சாரணர் தலைவர்,
கிளி / பூநகரி ம. வி. பூநகரி:

யார் சாரணியத்தில் இணைந்து சின்னம் சூட்டப் படுகின்றானோ அவன் முழுமையான சாரணன் ஆவான் அச்சாரணன் தனது இறுதிக் காலம் வரைக்கும் சாரணனே என்றும் எவன் சாரணியத்தில் கட்டுப்பாடுடன் தொடர்ந்து கடமையினை மேலாக மதித்து சேவை புரிகின்றானோ அவன் எப்போ ஒரு நாள் உலக சாரணனைச் சந்திக்கத்தான் போகின்றான். என்று தந்தை பேடன் பவல் கூறியுள்ளார் சாரணர்கள் உலக சகோதரர்களாக வாழ வளர

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி ப. நோ. கூ. சங்கத்தின் புதிய தலைவர்

சிறந்த கூட்டுறவாளரும், கல்விச்சமூகத்தைச் சேர்ந்தவருமான திரு பொன். தில்லைநாதன் அவர்கள் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவராக அண்மையில் நடைபெற்ற நெறியாளர் குழுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார் இத்தெரிவின் போது கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு க. முருகேசு அவர்களும் தமிழீழநிர்வாகசேவைப்பகுதி கூட்டுறவுப்பொறுப்பாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. கடந்த முப்பது வருடகாலமாக தொடர்ந்து பொதுச்சபை உறுப்பினராகவும் இரு தடவை நெறியாளர் குழுவில் இடம்பெற்று பல சேவைகளைப் புரிந்த கூட்டுறவாளராகிய இவரது அனுபவ முதிர்ச்சி இச்சங்கத்தின் அபிவிருத்திக்கு விமுதாக அமையும் என கூட்டுறவாளர்கள் நம்புகின்றனர் இவரது பதவிக்காலத்தில் இச்சங்கம் பலசாதனைகள் புரிந்து நலிவுற்ற எம்மக்களுக்கு நற்சேவைகள் ஆற்றி நாடுயர நலம்பெற கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையின் சார்பாக மனமார வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்:

வாழ்க கூட்டுறவுத்தத்துவம்

வளர்க நம் ஒற்றுமை என கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபைத்தலைவர் மு. சண்முகராசா தெரிவித்தார்.

# கொத்தணி இளைகள் அமைத்தல்

பூநகரி ப. நோ. கூ. சங்கக் கிளைக்குழுக்கள் 2000-ம், 2001-ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் 5 கொத்தணிக் கிளைகளாகப் பிரிக்கப்பட்டு அப்பிரதேசங்களுக்கு மாதமொருதடவை தலைவர் பொதுமுகாமையாளர், நெறியாளர்குழு உறுப்பினர்கள் நேரில் சென்று அவர்களின் பிரச்சனைகளை அறிதல், போர்க்கால சூழ்நிலையில் சங்கத்தின் பங்கு அங்கத்தவரின் பங்குபற்றி கலந்துரையாடல் நடாத்துவது எனத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இச்சங்கத்தின் தலைவர் திரு பொன் தில்லைநாதன் அவர்கள் தெரிவித்துள்ளார். இக்கலந்துரையாடல்களுக்கு அப்பகுதி

(6ம் பக்கம் பார்க்க)

# முழங்காவிலில் மாவீரர் மண்டபம் திறந்து வைப்பு

முழங்காவில் பகுதியில் மாவீரர்மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது

இந்நிகழ்வு முழங்காவில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி கலைமகள் தலைமையில் நடைபெற்றது. முழங்காவில் பிரதேச எல்லைப் படைப் பொறுப்பாளர் திரு கந்தன் அவர்களும், முழங்காவில் கிழக்கு வலய போர் எழுச்சிக்குழுத் தலைவர் சிவஸ்ரீ கை. இராஜேஸ்வரக்குருக்கள் அவர்களும் ஈகைச்சுடரேற்ற தேசியக்கொடியினை தமிழீழ மாவீரர் பணிமனை மகளிர் பிரிவுப்பொறுப்பாளர் செல்வி அர்ச்சனா அவர்கள் ஏற்றி வைத்தார்.

மாவீரர் மண்டபத்தை தமிழீழ எல்லைக்காப்புபடை நிதியப்பொறுப்பாளர் திரு ரமேஸ் அவர்கள் திறந்து வைத்தார்.

மாவீரர்களின் திருவுருவப் படங்களுடன் அனைத்து கரும்புலி மாவீரர்களின் திருவுருவப்படங்களும் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அறிவொளி சனசமூக நிலையம் திறந்து வைப்பு

முழங்காவில் இரணைமாதா நகரில் அறிவொளி சனசமூக நிலையம் திறந்துவைக்கப் பெற்றது இரணைமாதாநகர் ஊரக போர்எழுச்சிக் குழுவின் ஏற்பாட்டில் உருவான இந் நிகழ்வில் அப்பகுதிவாழ் மக்கள் பெருமளவில் பங்குபற்றினர். தமிழீழத் தேசியத்தலைவரின் பிறந்த நாளன்று முழங்காவில் பிரதேச போர்எழுச்சிக்குழுத் தலைவர் திறந்துவைத்தார்.

(க)

# செய்திக் குவியல்கள்

ஃ நடந்துமுடிந்த தேர்தலை நோக்கும் போது அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தல் முறை நம்பகத் தன்மையற்றதாக காணப்படுவதாக பல விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஃ ஜம்முகஸ்மீர் தீவிரவாதிகளுடன் நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் நோக்குடன் றம்ழான் மாதத்தில் போர் நிறுத்தத்தை அறிவித்த இந்திய அரசு மேலும் ஒரு மாத காலம் நீடித்துள்ளது.

ஃ கூட்டுறவுச் சங்கங்களை பல் துறைகளிலும் மேம்படுத்தும் நோக்குடன் கூட்டுறவு அபிவிருத்தி அதிகார சபை ஒன்றை நிறுவ இருப்பதாக இலங்கை கூட்டுறவு அமைச்சர் திரு தேசசிங்க அறிவித்துள்ளார்.

ஃ பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் பழுதடைந்த காசுத் தாள்களை மாற்ற மக்கள் வசதி உரிய நடவடிக்கை எடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஃ யாழ் மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்த ஒய்வூதியதரிற்கு விண்ணப்பிக்க இவருக்கு அனுமதி கிடைத்துள்ளது.

ஃ கிளிநொச்சி மாவட்டத்தில் யுனிசெப் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பெற்ற வேலைத் திட்டம் சீமெந்து தட்டுப்பாட்டினால் தாமதமாகி வருகின்றது.

ஃ இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் தாண மலேரியாத் தாக்கம் அதிகமாக இருக்கிறது மலேரியா தடுப்பு நடவடிக்கைகளை அரசு புறக்கணிப்பதே இதற்கு காரணம என சர்வதேச சுகாதார அமைப்பொன்று தெரிவித்துள்ளது

ஃ அன்னை சாரதாதேவியின் 107 வது ஜயந்தியினத்தை முன்னிட்டு யாழ் பல்கலைக் கழக மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில் உரை நிகழ்த்திய விஞ்ஞான பீடமாணவன் சத்தியேந்திரா குறிப்பிடும் போது சாதிங்முறை கொடூரமானது மனித நேயமுள்ளவர்கள் இதை வெறுக்கிறார்கள் என தெரிவித்துள்ளார்.

ஃ நேபாள நாட்டில் இந்தியருக்கு சொந்தமான வர்த்தக நிறுவனங்கள் வன்முறையாளர்களால் சூறையாடப்பட்டன.

ஃ கெயர், ஒக்ஸ்பாம் நிறுவன அனுசரணையுடன் பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனம் தனது பயனாளிகளுக்கு பழமர வீட்டுப் பயிர்ச் செய்கை திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பயனாளிகளுக்கு பழ மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு P. M. D. O. நிறுவன அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஃ அமெரிக்காவின் 42 வது ஜனாதிபதியாக ஜோர்ஜ் வில்லியம்புஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஃ அமெரிக்காவில் கல்லீரல் நோயின் பாதிப்பு அதிகரித்து வருகிறது. கல்லீரலை தயாரிக்க முடியுமா என ஆராய்ந்த DR நிக்முடியுமென நிரூபித்துள்ளார். எலும்பிலிருந்தும் டென்செல்கள் மூலம் அது சாத்தியமென கூறுகின்றார்.

ஃ வாழைமரத்தண்டு இலைகள் மூலம் புரதச்சத்து நிறைந்த பிராணிகளின் உணவை தயாரிக்க முடியும் என இந்திய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

ஃ இருபதினாயிரம் இலங்கை சிறைக்கைதிகளின் செலவு அதிகரித்து வருவதால் சிறைக்கூடங்களில் மரத்தளபாட தொழில் முயற்சிகளை உருவாக்கி அவ்வேலைகளின் ஊடாக கிடைக்கும் வருமானத்தில் சிறைக் கூடத்தை நிர்வகிக்க சிறிலங்கா அரசு முயற்சி செய்து வருகிறது.

ஃ சிறைவைக்கப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாப் செரிப்பிற்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு சவுதி அரேபியாவிற்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

ஃ நவம்பர் - டிசம்பரில் இந்திய சிம்பாப்வே கிரிக்கட் அணிகளுக்கிடையே நடைபெற்ற ஐந்துமுழுநாள்போட்டியில நான்கிற்கு ஒன்று எனவும் இரண்டு டெஸ்ட் போட்டியில் 1-0 என இந்தியா வெற்றியீட்டியது.

ஃ தகவல் தொழில்நுட்ப மைய செயற்பாடுகளில் அமெரிக்கா, பிரிட்டனுக்கு அடுத்த நிலையில் இந்தியா உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஃ ஜனநாயகம் வீழ்ச்சியுற்ற மேற்காசியாவில் குவைத்திற்கு அடுத்ததாக "பாரேன்" ஜனநாயகப் பாதைக்கு திரும்பியுள்ளது.

ஃ இடம்பெயர்ந்து அக்கராயன் குளத்தில் இயங்கி வந்த திருவையாறு படித்த வாலிபத்திட்ட விவசாய கூட்டுறவுச்சங்கம் மீண்டும் தனது சொந்த இடத்திற்கு தலைமை அலுவலகத்தை மாற்றி இயங்கி வருகிறது: அத்துடன் விவசாய உள்ளீடுகளை விநியோகம் செய்யும் கிளையொன்றையும் அலுவலகத்திற்கு அருகில் திறந்துள்ளது. (க)

ஃ பூநகரி வலைப்பாடு கிராமம் தனிக் கிராம அலுவலர் பிரிவாக மாற்றப்பட வேண்டுமென அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர் இங்கு சுமார் 300 குடும்பங்கள் வசித்துவருகின்றனர்.

ஃ வலைப்பாடு புனித அன்னம்மாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர்களிடமிருந்து கடலுணவுகளை கொள்வனவு செய்து வடபகுதிக்கு வெளியே அனுப்பி வருகிறது என மேற்படி சங்கத் தலைவர் திரு. சி. சிம்மானுவேல் தெரிவித்தார்.

ஃ இஸ்ரேல், பாலஸ்தீனர்களுக்கிடையிலான முறுகல் நிலை 12 மாத காலமாக தொடர்கிறது.

ஃ வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து தென்னிலங்கை மாவட்டங்களுக்கு நெல் கொண்டுசெல்ல வவுனியா இணைப்பதிகாரி அனுமதி வழங்யுெள்ளதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

ஃ இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை பத்தாயிரம் பேர் வரை இருக்கும் என்றும் சுமார் 95 பேர் இவ் ஆட்கொல்லி நோயினால் இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஃ வடக்கு கிழக்கு மாகாண சமூக இணைக்களத்தின் அனுசரணையுடன் பூநகரி, பிரதேச செயலகம் நடாத்திய சிறுவர் முதியோர் தினம் 13ம் திகதி பூநகரி பிரதேச செயலர் தி. வைரமுத்து தலைமையில் நடைபெற்றது. இத் தொடர்பான போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஃ இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபனம் டிசம்பர் 16ம் திகதி 75 வது ஆண்டு நிறைவை பூர்த்தி செய்தது.

ஃ உலக ஊனமுற்றோர் தினமான டிசம்பர் 3ம் திகதி வன்னியின் பல பாகங்களில் நினைவு கூரப்பெற்றது.

ஃ இடம்பெயர்ந்திருந்த கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் மீண்டும் கிளிநொச்சியில் இயங்க ஏற்பாடு செய்து வருகிறது.

ஃ வட பிராந்திய பாரஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம்விரைவில் நடைபெற இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஃ இந்தியாவின் வெளியுறவுச் செயலராக ஷோக்வேயாவர் நியமிக்கப்பட்டுள்ளார். முதல் பெண் வெளியுறவுச் செயலாளர். இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஃ உலக கிண்ணத்தை நியூசிலாந்து (கிரிக்கெட்) பெண்கள் அணி பெற்றுக் கொண்டது. அவுஸ்திரேலியாவை 4 ஓட்டங்களால் வென்றது.

ஃ திருவையாறு விவசாய கூட்டுறவுச சங்கம் விதை உருளைக்கிழங்கை கொண்டுவந்து விநியோகம் செய்து வருகிறது.

ஃ ஆளணி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாத கூட்டுறவுச சங்கங்கள் தாமதியாது அங்கீகாரத்துக்கான விண்ணப்பத்தை அனுப்பிவைக்குமாறு கிளி / கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்நா. முருகேசு கோரியுள்ளார். மாவின் விலை குறைக்கப்பட்டதனால் இதப்பில் இருந்த மாவின் விலை குறைப்பை ஈடுசெய்யுமாறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்உணவுத்திணைக்களத்திடம் கோரியுள்ளன.

ஃ உலகில் தொழுநோயால் பாதிக்கப்படுவோரில் 78 விழுக்காடு இந்தியாவில் தான் உள்ளனர். முந்திரிப்பழத்தில் இருந்து இந்நோயை குணப்படுத்தும் புதிய மருந்தொன்றை நேருகோமியோபதி விஞ்ஞானக்கழகம் கண்டு பிடித்துள்ளது.

ஃ ஜேர்மனி தயாரிக்கும் ஒளி வீசும்டயர்களுக்கு கிராக்கி அதிகரித்து வருகிறது. காரணம் இது விபத்துக்களை தவிர்க்க உதவுவதாககூறப்படுகிறது. ஜேர்மன் மெற்போ நிறுவனத்திலிருந்து அமெரிக்கா இறக்குமதி செய்கிறது.

ஃ காய்கறிகளை தினமும் பயன்படுத்துபவர்களுக்கு நீரிழிவு நோய் அணுகாது என மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன.

ஃ இந்திய அரசு வழங்கும் சாகித்திய அகாடமி விருது இவ்வாண்டு முதுபெரும் எழுத்தாளர் க. சிவசங்கரன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது 21 இந்திய மொழிகளின் படைப்புக்களுக்கு இது வழக்கப்படுகிறது.

ஃ அதிகவெப்பம் பயிர்களின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது பால் காட்டின் எனும் விஞ்ஞானி கண்ணாடி இழைகள் மூலம் வெப்ப அதிகரிப்பை தடுக்கலாம் என கண்டுபிடித்துள்ளார்.

ஃ கறுப்பினப் பெண்மணியாரா "கொண்டேலாறெஸ்" அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ்ஸின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஃ உலக செஸ் சம்பியன் பட்டத்தை தமிழ் நாட்டைச் சேர்ந்த விஸ்வநாதன் ஆனந்த் தட்டிச் சென்றார்: கடந்த 24ந் திகதி தெக்ரானில் நடைபெற்ற போட்டியில் ஸ்பெயின்வீரர் "அலெக்ஸ் சிரோ"வை தோற்கடித்தார்

ஃ டிசம்பர் 24ந் திகதி புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் நினைவு தினம் கூரப்பெற்றது:

ஃ டிசம்பர் 5ம் திகதி கூட்டுறவின் தந்தை பெரியார் வீரசிங்கம் அவர்களின் 36வதுநினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஃ மிகக் குறுகிய டெஸ்ட் போட்டிகளில் 300 விக்கட்டுக்களை எடுக்க இலங்கை சூழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் முயல்கிறார் 291 விக்கட்டுக்களை இதுவரை எடுத்துள்ள முரளிதரன் தென்னாபிரிக்காவினுடான போட்டிகளில் இச்சாதனையை நிலை நாட்டுவார் என எதிர்பார்க்கபபடுகிறது. இதற்கு முன் அவுஸ்திரேலிய வீரர் 55 டெஸ்டுகளில் 300 விக்கட் வீழ்த்தியுள்ளார்:

ஃ அமெரிக்கா நாடாளுமன்று வெளிநாட்டுப் பொருட்கள் இறக்குமதிக்கு தடைவிதிக்கிறது சொந்த நாட்டுப் பொருட்களைவிட இறக்குமதிப் பொருட்கள் விலை குறைத்து விற்பனை செய்யப்படுவதே இதற்கு காரணம். இது குறித்து ஐரோப்பிய கூட்டமைப்பில் உள்ள 15 நாடுகள் இந்தியா ஜப்பான் தென்கொரியா என்பன உலக வர்த்தக அமைப்பிடம் புகாரிட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமம்
SANGAMAM
ஆறு 4 அருவி 4
மார்கழி 2000

சிறிலங்காவின் நிலைப்பாட்டால்

# மனித சமூகம் வெட்கித் தலைகுனிகிறது

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை குறித்த நாளிலிருந்து கடைப்பிடிக்கப் போகிறது என்ற செய்தி ஊடகங்களிலிருந்து வெளியான செய்தி கேட்டு பன்னாட்டு சமூகம் ஆவலுடன் வரவேற்றுக் கொண்டிருந்த வேளை எமது மக்களும் மகிழ்ச்சியில் குதூகலித்தார்கள் சிறிலங்கா அரசாங்கமும் அவ்வாறு யுத்த நிறுத்தம் மேற்கொள்ளும் என எதிர்பார்த்தார்கள் ஆனால் யுத்த நிறுத்த அறிவிப்பு வெளியாகி அந்த பரபரப்பு அடங்கு முன்பே சிறிலங்கா இராணுவம் யாழ் குடா நாட்டில பாரிய இராணுவ நடவடிக்கையை மேற் கொண்டு தமிழர்களை அழித்தொழிக்கும் போர் வெறியர்கள என தங்களை அடையாளம் காட்டி நிற்கின்றனர்.

அமைதிக்கான யுத்தம் நடத்தப்படுவதாக ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அடிக்கடி கூறிவருகிறார் ஆனால் அமைதிக்கு திரும்ப யுத்த நிறுத்தம் செய்ய மறுக்கிறார்.

இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண இலங்கை அரசாங்கம் கையாளும் விதம் குறித்து நாகரீகமுள்ள மனித சமூகம் வெட்கித் தலைகுனிகிறது.

இனப்பிணக்கு விவகாரங்களில் இலங்கை அரசின் போக்கு கவலைக்குரிய விடயமாக மாறிவருகிறது எனவும் அரசு போர் வெறியினை மாற்றிக் கொள்ளாவிட்டால் இலங்கை பேரழிவைச் சந்திக்கும் எனவும் மேற்குலக நாடுகள் அரசாங்கத்தை எச்சரித்துள்ளன.

சிறிலங்கா அரசாங்கம் காலங் கடந்தாவது மனித நேயத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தமிழர்களின் தாயகக் கோட்பாடுகளை அங்கீகரித்து விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தை நடாத்த முன் வரவேண்டும்.

நோர்வே தெரிந்த போர் நெருக்கடியை தவிர்க்கும் திட்டத்திற்கு சிறிலங்கா ஆட்சியாளர்கள் ஆதரவு தெரிவிக்காத போதும் விடுதலைப்புலிகள் தாமாகவே முன் வந்து ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை மேற் கொண்டனர்.

இயல்பு நிலையை தோற்றுவிக்கும் வகையில் யுத்த நிறுத்தத்தை அரசும் கடைப்பிடிக்க வேண்டும் என விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்தனர். ஆயினும் அரசு நிராகரித்துவிட்டது. ஆயினும் யுத்த நிறுத்தத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்கு தொடரப்படும் என்ற உறுதிப்பாட்டை விடுதலைப் புலிகள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

இது விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண தயாராக இருக்கிறது என்பதை உலகுக்கு வெளிப்படையாக தெரியப்படுத்தியுள்ளனர் அண்மைக்காலமாக விடுதலைப்புலிகள் எடுத்துவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடர்பாக மேற்குலக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அரசு போர் நிறுத்தத்தை நிராகரித்திருப்பது மோசமான அரசியல் நடவடிக்கையாகும்.

அரசாங்கத்தின் மிக முக்கியமான அமைச்சர்கள் இனப்பிரச்சினை விடயத்தில் வெளியிட்டு வரும் அறிக்கைகள் தமிழர்களை இனரீதியாக துடைத்தழிக்கும் செயலாகவே கருதப்படுகிறது. இது குறித்து பன்னாட்டுசமூகம் இலங்கையை கண்டிக்க வேண்டுமெனவும் போரை நிறுத்தி அமைதிக்கு திரும்ப மறுக்கும் அரசிற்கு வழங்கும் உதவிகளை நிறுத்த வேண்டுமெனவும் உலகத் தமிழினம் எதிர்பார்க்கிறது என்பதை இங்கு சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை

கடந்த இருபத்தைந்து வருடங்களாக நீடித்துவரும் போரை முடிவுக்கு கொண்டுவந்து இயல்பு வாழ்வு நிலையை தோற்றுவிப்பது அரசுக்கு இயலாமல்போனால் அரசு தொடர்ந்து யுத்தம் புரிவதும் இயலாத காரியமாகும்.

சிறிலங்கா அரசு தமிழ்ப்பிரதேசங்களை ஆக்கிரமித்து அப்பகுதிகளிலுள்ள மக்களை இராணுவம் பொறிக்குள் சிக்கவைத்து தனது இராணுவ நலன்களை தக்க வைத்துக் கொள்ளும் முயற்சிகள் நீண்டகாலம் நிலைத்திருக்கப் போவதில்லை என்பதை சிங்கள ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ளும் காலம் நெருங்கிவிட்டது.

போர் நிறுத்தம் ஏற்படும் இயல்பு வாழ்வு நிலை தோன்றும் ஆக்கிரமித்த இடங்களை விட்டு இராணுவம் வெளியேறும். தமது உடைமைகளை இழந்தவர்களுக்கு நட்ட ஈடு கிடைக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உதவிகள் கிடைக்கும் கோடிக்கணக்கான சொத்தழிவுக்குள்ளான கூட்டுறவுச் சங்கங்களுக்கு நட்ட ஈடு கிடைக்கும் என இவ்வாறான சந்தர்ப்பங்களில் அனைவரும் எதிர்பார்ப்பது வழக்கமானதுதான் அண்மைக் காலங்களில் இவை எல்லாம் நடைபெறுமானால் மகிழ்ச்சிக்குரிய விடயம் தான். அதை வரவேற்போம். இதைவிட எல்லாவற்றுக்கும் மேலாக கூட்டுறவின் குரலாக ஒலிப்பது பலம் தான்.

பலம்தான் எமது வாழ்வை தீர்மானிக்கப் போகிறது. ஆதலால் எம்மைப் பலப்படுத்த ஒன்றுபடுவோம்.

# போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீது கோரப் புயலின் தாக்கம்

(அலுவலக நிருபர்)

போரினாலும் பொருண்மிய சுமைகளினாலும் பாதிக்கப்பட்ட வன்னிவாழ் மக்கள் மீது கோரப்புயலின் தாக்கம் பெரும் அழிவையும் அவலத்தையும் ஏற்படுத்தியுள்ளது. வன்னியின் பெரும்பகுதி இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையிலும் அரச, அரச சார்பற்ற பொது நிறுவனங்களின் உதவிகளின்றி மக்கள் தாமாகவே முன்வந்து தமது சொந்த இருப்பிடங்களில் தற்காலிக கொட்டில்கள் அமைத்து வாழ்ந்து வந்த வேளையில் கோரப்புயலும் பெரும் மழையும் மீண்டும் ஒரு அழிவை ஏற்படுத்தியுள்ளது.

பருவமழை ஆரம்பமாக முன்னரே பெரும்பாலும் இடம் பெயர்ந்த மக்கள் வாழும் குடியிருப்புக்களின் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. இதனால் குடியிருப்புக்களில் வாழ்ந்த மக்கள் கடும்மழையினாலும் புயலினாலும் பாதிக்கப்பட்டு மீண்டும் ஒரு இடப்பெயர்வை சந்தித்து பாடசாலைகளிலும், பொதுமண்டபத்தினுள்ளும் தஞ்சமடைந்து அவலவாழ்வை சந்தித்து நிற்கிறார்கள். நீண்டகாலமாக கடும்வரட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட வன்னிப் பெரும்நிலப்பரப்பின் பயிர்ச்செய்கையும் ஓரளவு தலை நிமிரும் வேளையிலும் கூட நெற்செய்கை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. வயல்கள், விதைநிலங்கள் கடும்வெள்ளத்தினால் மூழ்கிப்போயுள்ளது. பயன்தரும் மரம் செடிகள், வாழைமரங்கள் காற்றினால் வீசி எறியப்பட்டு பெரும் அழிவைசந்தித்துள்ளன.

வன்னிக்கடற்பரப்பில் சிறிய குடிசைகள் அமைத்து வாழ்வியல் வேதனையின் மத்தியில் சிறுக தொழில் புரிந்துவந்த கடல் தொழிலாளர்கள் தமது மீன்பிடி உபகரணங்களையும் வள்ளங்களையும்புயலுக்குபறி கொடுத்த துர்ப்பாக்கிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

காலம் காலமாக உரிய பராமரிப்பின்றி கிடந்தவன்னி பெரும் நிலப்பரப்பின் சிறிய பெரிய போக்குவரத்துச் சாலைகள் மேம்பாலங்கள் வடிகால்கள் மக்கள் பாவனைக்கும் வாகனசேவைக்கும் பெரும்தடையாகவும் ஆபத்தாகவும்மாறிவருகிறது இதனைத்துன்பங்களையும், இழப்புக்களையும்சந்தித்த மக்களையும் மக்கள் நிறுவனங்களையும் அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் உரிய முறையில் கவனத்தில் கொள்ளுமா என்பது தான் கேள்வி?

இயற்கையின் சீற்றத்திலிருந்து மக்களை பாதுகாக்க அரசு பாரபட்சம் காட்டுவதுதான் ஏனோ என்பது தான் பாதிக்கப்பட்ட மக்களின் ஏக்கமும் தாக்கமுமாகும்? இழப்புக்களின் பெறுமதிகளோ மதிப்பிடமுடியாதவை.

கிளி மாவட்டத்தில் மட்டும் 2000த்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இருப்பிடங்களை இழந்துள்ளதாக அறியப்படுகிறது.

# ஓலை விநியோகம்

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள குடியிருப்புக்கள் வேய்வதற்கு தமிழர்புனர்வாழ்வுக்கழகம் 5000 தென்னை ஓலைகளை பிரதேச செயலகத்துக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

காலம் சங்கங்கள்

வவுனியா வடக்கு ப.நோ. கூ. சங்கப் பிரதிநிதிகள், துணைப்பொறுப்பாளர் பொ. இளஞ்சேரன் அவர்கள் பொது முகாமையாளர்கள் பிரதேச நிர்வாக சேவைப் பொறுப்பாளர்கள் கூட்டுறவுப் பகுதிப் பொறுப்பாளர்கள் பங்குபற்றிய சிறப்பு மாநாடு ஒன்று கிளிநொச்சியில் நடைபெற்றது

கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் தாங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை பல்வேறு வடிவங்களில் முன் வைத்தனர்

இராணுவ ஆக்கிரமிப்புக்களால் ஏற்பட்ட இழப்புகளுக்கு அரசு எவ்வித நட்ட ஈடும் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் இதன் பெறுமதி பல நூறு கோடி ரூபாவுக்கு மேல் இருக்கும் எனத் தெரிவித்தனர் அத்துடன் தன் நாட்டு மக்கள் மீது மனித நேயமற்ற கொடிய பொருளாதார தடையை விதித்துள்ளதனால் மக்களுக்குரிய அத்தியாவசிய சேவைகளை வழங்க முடிவில்லை எனவும் இதனால் கூட்டுறவுச் சங்கங்களின் வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பிக்கும் நிலை உருவாகியுள்ளது எனவும் குறிப்பிட்டனர்

இடம் பெயர்ந்த மக்களுக்குரிய நிவாரண விநியோகத்தை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அரச அதிபர்களின் பணிப்பிற்கமைய வழங்கி வருகின்றன. ஆயினும் இவ் விநியோகத்தை மேற் கொண்டதற்கான ஏற்றுக் கூலி, கையாளல் கூலி என்பன மாவட்ட அரசாங்க செயலகங்களினால் வழங்கப்படாமல் இருந்து வருகிறது. இதனால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுளளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. கூட்டுறவுச்சங்கங்களின் பாரதிகள் உதிரிப்பாகங்கள் இன்றி பெரும் அவதிப்படுவது குறித்தும் பேசப்பட்டது

வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதால் பணியாளர்களுக்குரிய அதிகரிக்கப்பட்ட புதிய சம்பளத்தை வழங்க முடியாமல் உள்ளது. போசிற விடயங்கள் அனைவராலும் தெரிவிக்கப்பட்டது. ...பாதிப்படைந்த கூட்டுறவு ...

யால தற்போதைய சூழ்நிலையில் பணியாளர்களுக்கு ரூபா 500/- வாக்குவிப்புப்படி வழங்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது கூட்டுறவுச் சங்கங்களின் நெருக்கடிகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றி முடிவெடுப்பதற்காக மீண்டும் கூடிப் பேசுவது என தீர்மானிக்கப்பட்டது.

திட்டமிட்டதைக் கண்டித்து கிளிநொச்சி மாவட்டவெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் கோபி அனன் அவர்களுக்கும் சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் வெளிநாட்டு தூதராலயங்களுக்கும் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளது.

கொததணி நெறியாளர்குழு உறுப்பினர் க. ஏற்பாடு செயலர் எனவும் இதன் மூலம் சங்கத்துக்கும் சங்க அங்கத்தவருக்கும் இடையிலான தொடர்பை மேலும் நெருக்கமாக்கி சங்கத்தின் சேவையை மேலும் வளர்ச்சியடையச் செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ச. குணரத்தினம்

இருபால வின ஒளியை ஏந்தியவாறு பணியாளர்கள் பணிப்பாளர்கள்விருந்தினர்களும்விழாமண்டபத்தை சென்றடைந்ததும் மண்டபத்தில அலங்கரிக்கப்பட்டிருந்த திவ்வியஜோதியின் குடிலில் உள்ள ஒளிச்சுடர்கள் எல்லோராலும் ஏற்றி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இறைவார்த்தை வாசிக்கப்பெற்று அதற்கான விசேட உரை ஒன்றியத் தலைவர் ... அவர்களால் வழங்கப் பட்டதுடன் கிறிஸ்மஸ் கீதங்கள் இசைக்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், அக்கராயன் பிரதேச கூட்டுறவுப் பகுதி பொறுப்பாளர் திரு தாமரைச் செல்வன் பணியாளர் க. ஜெயக்குமார் ஆகியோர்உரை நிகழ்த்தினர்.

ஹென்றிலிஸ்மன் அவர்களின் நன்றியுரையுடனும் இனிய மதியபோசனத்துடன் விழா இனிது நிறைவு பெற்றது.

பார ஊர்தி மூல நிர்வாக சேவைத் துணைப் பொறுப்பாளர் திரு பொ. இளஞ்சேரன் அவர்கள் ஏற்றி வைத்தார் கூட்டுறவுக் கொடியினை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் நா. முருகேசு ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கூட்டம் தொடங்கியது. தலைமையுரையினைத் தொடர்ந்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஒன்றியத் தலைவர் புங்குடுதீவு நயினாதீவு ப.நோ. கூ. சங்கத் தலைவர் தெல்லிப்பளை பல நோ. கூ. சங்கத் தலைவர், பார ஊர்தி சங்கத்தின் துணைத் தலைவர் ஆகியோர் உரை நிகழ்த்தினர் அதனைத் தொடர்ந்து பல விடயங்கள் ஆராயப்பட்டு இறுதியில் புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது.

சூறைக் காற்றினால் இப்பகுதியில் 48000 திற்கு மேற்பட்ட வாழைமரங்கள் அடியோடு வீழ்ந்து முறிந்துள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட விவசாயிகள் விநாயகபுர விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக பூநகரி பிரதேச செயலரிடம் நட்ட ஈட்டுக்கான உதவி பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்து வருகின்றனர். முறிந்த வாழை மரங்களின் பெறுமதி 96 இலட்சம் ரூபா வரை இருக்குமென முழங்காவில் விவசாய கூட்டுறவுச் சங்கத் தலைவர் முருகவரட்ணம்தெரிவித்தார்.

சரணன்

வழிஅமைப்போம் வாழ்வில் மிளிரவைப்போம் வளம் கோண்ட நாடாக்குவோம்

இனி / மா. கூ. ச. ஒன்றியம் சார்பாக இப்பத்திரிகை இனி / ... அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org